Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நீர்வளத்துறை

அனுப்புநர்

பொறிஞர்.தா.அண்ணாதுரை, எம்.டெக்.,
செயற்பொறியாளர், நீ.வ.து
சிற்றாறு வடிநில கோட்டம்,
தென்காசி (இ) குடியிருப்பு

பெறுநர்

திரு.செல்லபாண்டியன், (முகவர்)
திரு.ஹேமந்த்குமார்,
திரு.கோபிகுமார்
திரு.சசிகுமார்
திப்பணம்பட்டி
தென்காசி மாவட்டம்.

கடித எண்: 88/ வபி/இவஅ-1/கோ.11A/2024 / நாள். 06.2024

அய்யா,

பொருள்: திரு.செல்லபாண்டியன்,திரு.ஹேமந்த்குமார், திரு.கோபிகுமார்,திரு.சசிகுமார் ஆகியோரது மனுவில் தென்காசி மாவட்டம், தென்காசி வட்டம், கல்லூரணி கிராமம், புல எண்: 169/3B-ல் நிலத்திற்கு செல்ல நீர்வளத்துறை கட்டுப்பாட்டில் தென்காசி வட்டம், திப்பணம்பட்டி கிராமம் புலஎண் 344-ல் உள்ள திருப்பணி புதுக்குளத்தின் மறுகால் ஓடையின் குறுக்கே தனது சொந்த செலவில் பாலம் அமைக்க அனுமதி வழங்க கேட்டல் - சார்பு

பார்வை: 1.திரு.செல்லபாண்டியன், முகவர் மற்றும் திரு.ஹேமந்த்குமார், திரு.கோபிகுமார், திரு.சசிகுமார் ஆகியோரது மனுநாள்: 30.04.2024.

2.உதவிசெயற்பொறியாளர் நீ.வ.து சிற்றாறு வடிநில உபகோட்டம், தென்காசி அவர்களின் க.எண் :2 /கோ– 13(NOC) /2024/உசெபொ/ நாள்: 10.06.2024

பார்வை 1–ல் காணும் திரு.செல்லபாண்டியன், முகவர் மற்றும் திரு.ஹேமந்த்குமார், திரு.கோபிகுமார், திரு.சசிகுமார் ஆகியோரது மனுவில் தென்காசி மாவட்டம், தென்காசி வட்டம், கல்லூரணி கிராமம், புல எண்: 169/3B-ல் நிலத்திற்கு செல்ல நீர்வளத்துறை கட்டுப்பாட்டில் தென்காசி வட்டம், திப்பணம்பட்டி கிராமம் புலஎண் 344-ல் உள்ள திருப்பணி புதுக்குளத்தின் மறுகால் ஓடையின் குறுக்கே தனது சொந்த செலவில் பாலம் அமைக்க அனுமதி வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் உதவிசெயற்பொறியாளர், நீ.வ.து, சிற்றாறு வடிநில உபகோட்டம், தென்காசி அவர்கள் தளத்தினை ஆய்வு செய்து மேற்படி பாலம் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ள இடமானது திருப்பணி புதுக்குளத்தின் மறுகால் ஓடை ஆகும். எனவே மனுதாரர் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தில் அவர் இணைத்துள்ள வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள படி 3.00மீ அகலமும் 1.80மீ உயரமும் உள்ளது என்றும் அதன் நீர் வெளியேற்றும் திறன் அளவை கருத்தில் கொண்டு 3.00மீ அகலமும் 1.80மீ உயரமும் கொண்ட பாலம் அமைக்கலாம் என உதவிசெயற்பொறியாளர் பரிந்துரை செய்து அனுப்பியுள்ள அறிக்கையின் அடிப்படையிலும் கீழ்கண்ட நிபந்தனைகளுடன் பாலம் அமைக்க தடையில்லா சான்று வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. மனுதாரர் கோரியுள்ள பாலம் திருப்பணி புதுக்குளத்தின் மறுகால் ஓடையின் குறுக்கே வரைபடத்தில் உள்ளபடி கட்டப்படுதல் வேண்டும்.

2. பாலம் அமைக்கும் முழுசெலவிற்கும் மனுதாரரே பொறுப்பு ஏற்க வேண்டும் பராமரிப்பு செலவுகளும் மனுதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

3. பாலம் கட்டுமானம் சம்பந்தமான தொழில் நுட்பம் அனைத்திற்கும் மனுதாரரே முழுப்பொறுப்பு ஆகும். இத்துறைக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை.

4. கால்வாய் தளமட்டத்தை மாற்றக்கூடாது மற்றும் பாலத்தின் அகலம் 3.00மீ மற்றும் 1.80 மீ உயரம் என்ற அளவில் இருத்தல் வேண்டும். மேற்கூரை காங்கீரிட் Deck Slab 0.30மீ உயரத்திற்கு இருக்க வேண்டும்.

5. பாலம் IRC தரத்தின் படி நெடுஞ்சாலைதுறை வடிவமைப்பின் படியும், நீர்வளத்துறை பொறியாளர் முன்னிலையில் அவர்களின் அறிவுரைப்படி கட்டப்படவேண்டும்.

6. பாலம் கட்டி முடிக்கும் பொழுது கரை சேர்மானப்பணிகள் (Bank Connecting work) அனைத்தும் கால்வாய் மற்றும் கரைப்பகுதிகளுக்கு இடர் வராமல் செய்து முடிக்க வேண்டும்.

7. கால்வாயின் தளமட்டத்தை மாற்றக்கூடாது.

8. பாலம் கட்டி முடிக்கப்பட்ட பின் கட்டிட இடிபாடு பொருட்கள் வேண்டாத மீதம் உள்ள கட்டுமான தளவாட பொருள்கள் அனைத்தையும் துப்புரவாக அகற்றிட வேண்டும்.

9. பாலம் கட்டியதன் மூலமாக பாலம் அதன் தொடர் பாதைகள் ஆகியவற்றின் மீது யாதொரு உரிமையும் கொண்டாடக் கூடாது.

10. உத்தேசிக்கப்பட்ட பாலம் அமைக்கும் பொழுது கீழ்ப்பகுதி பாசனத்திற்கான தண்ணீர் முறையாக வழங்கப்படுதல் வேண்டும் இடையூறு ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாக்கக்கூடாது.

11. பாலம் கட்ட தற்போது அனுமதிக்கப்பட்ட இடத்தை தவிர வேறு இடத்தில் கட்டவோ அல்லது மாற்றி அமைக்கவோ கூடாது.

12. உத்தேசிக்கப்பட பாலத்தின் முழு உரிமையும், நீர்வளதுறை அமைப்பின் கீழ் கொண்டு வரப்படும். குளம் மற்றும் கால்வாயில் பின்னர் மராமத்து பணிகள் அல்லது விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும் போது கட்டப்பட்ட பாலத்திற்கு ஏதேனும் சேதம் அல்லது முழுமையாக நீக்கப்பட வேண்டியிருந்தாலும் அதற்கான இழப்பீடு தொகை ஏதேனும் இத்துறையினரால் வழங்கப்படமாட்டாது.

13. பாலம் கட்டும் பணிக்கு அஸ்திவாரம் தோண்டிய பின் தளமட்டம் அமைத்தல், கற்காரை மேல் மட்டம் ஆகியவற்றின் ஒவ்வொரு நிலையிலும் உதவிசெயற்பொறியாளர், நீ.வ.து, சிற்றாறு வடிநில உபகோட்டம், தென்காசி அவர்களிடம் தெரிவித்து ஒப்புதல் பெற்றுக் கொண்ட பின்னரே பணிகள் செய்யப்பட வேண்டும் .

14. நீர்வழிப்பாதையில் (Liner Water Way) அளவு எந்த வகையிலும் குறையாமல் பார்த்துக்கொள்வதுடன் அதிக நீர் வெளியேற்று திறனும் (MFD) குறையக்கூடாது.

15. கட்டிமுடித்தப்பின்பு உதவிசெயற்பொறியாளரால் சரிபார்க்கப்பட்டு கட்டுமானம் உரிய பதிவேடுகளில் பதிவு செய்யப்படும்.

16. பாலம் கட்டிமுடித்தபின்பு அவை நீர்வளதுறையின் சொத்தாகும் என்றும் நீர்வள ஆதாரதுறையின் நீர்வழி வரைபடத்தில் (Flow Diagram) குறிக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

17. வரும் காலங்களில் மேற்படி பாலத்தினால் பொதுமக்களுக்கோ/ விவசாயிகளுக்கோ பாதிப்பு ஏதும் ஏற்படும் எனில் மேற்படி அனுமதியை ரத்துசெய்ய இத்துறைக்கு முழு அதிகாரம்

உண்டு எனவும் இதுகுறித்து மனுதாரர் இத்துறைக்கு எவ்வித இழப்பீடு கோரி உரிமை கொண்டாக்கூடாது எனவும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

18. பின்வரும் காலங்களில் மேற்படி இடங்கள் குடியிருப்பு பகுதிகளாக அல்லது தொழிற்சாலைகளாக மாற்றம் ஏற்பட்டால் பாலம் சம்பந்தமான உறுதிச்சான்றிதழ் நெடுஞ்சாலைத்துறையிடம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

19. பாலத்தின் குறுக்கே வாயிற்கதவுகள் (Gate) எதுவும் நிறுவக்கூடாது மேலும் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு எவ்வித தடுப்போ இடையூறோ ஏற்படுத்தக்கூடாது.

20. பாலம் வேலைகள் தண்ணீர் அடைப்பு காலமான மார்ச் முதல் மே வரையிலான காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட வேண்டும். அவ்வாறு பாலம் கட்டி முடிக்க தவறும் பட்சத்தில் இவ்வாணை ரத்து செய்யப்படுவதாக கருதப்படும். அத்துடன் பாலம் கட்ட அனுமதி வழங்கிய நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் பாலம் கட்டி முடித்திருக்க வேண்டும் தவறும் பட்சத்தில் இவ்வாணை இரத்து செய்யப்படுவதாக கருதப்படும்.

21. கால்வாயையும் கட்டுமானங்களையும் இத்துறை அலுவலர்கள் எந்நேரமும் ஆய்வு செய்ய முழு அதிகாரம் உண்டு.

22. இயற்கை சீற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இத்துறை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

23. பாலம் கட்டப்படும் பொழுது நீர்வளத்துறைக்கு சொந்தமான கால்வாய், குளங்களில் மடை மறுகால் இவற்றில் எவ்வித சேதமும் இல்லாமல் பாலம் கட்டப்பட வேண்டும் தவறும் பட்சத்தில் பாலம் அனுமதி ரத்து செய்யப்படும். மேலும் பாதிப்புக்கான செலவினத்தொகை வசூலிக்கப்படும்.

செயற் பொறியாளர், நீ.வ.து,
சிற்றாறு வடிநில கோட்டம்,
தென்காசி (இ) குடியிருப்பு.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate